ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2273/86 - 2022 අප්‍රේල් මස 01 වැනි සිකුරාදා - 2022.04.01

*2273/86 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்**

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

*இலங்கையில் மக்கள் அவசரகால நிலைமை நிலவுவதன் காரணமாக பொதுமக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல், பொதுமக்கள் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகள் என்பவற்றைப் பேணுவதற்காக இவ்வாறு செய்தல் உசிதமானதாகவுள்ளதென நான் அபிப்பிராயப்படுவதினால் ;*

*சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு அக்கட்டளைச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள் இரண்டாயிரத்து இருபத்து இரண்டாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதி தொடக்கம் இலங்கை பூராகவும் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*இரண்டாயிரத்து இருபத்து இரண்டாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதியன்று கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

**காமினீ செனரத்,**
*சனாதிபதியின் செயலாளர்.*

EGO 04-0009

1A - G 36539 — 370 (2022/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*